2005 பிப்ரவரி 7]

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெறிநாய்க் கடி மருந்து போடப்படாததால், மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஒரு நாளைக்கு 500, 600 பேருக்கு மேல் வந்து அவர்களுக்கு மருந்து கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது என்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, வெறிநாய்க் கடி மருந்துகளை ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? அல்லது வெறி நாய்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாய்க்கடி மருந்தைப் பொறுத்த அளவிலே இதற்கு முன்னாலே தகுந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற மருந்துகளுக்குத் தட்டுப்பாடு வரக் கூடாது என்பதற்காக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னால் இதற்கான சிறப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு அத்தனை மருத்துவமனைகளிலும் மருந்துகள் கிடைக்க வேண்டுமென்பதற்கான ஒரு உத்தரவினை இட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாவட்ட மருத்துவமனைகள், அதுபோல இருக்கக்கூடிய தாலுகா மருத்துவமனைகள், மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இப்போது மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 46, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

46—

தாட்கோ பயிற்சி மையக் கட்டடங்கள்

***37526—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் தாட்கோ பயிற்சி மையக் கட்டடங்கள் செயல்படாமல் உள்ளதால் இவற்றை

ஊராட்சி பராமரித்துப் பயன்படுத்திக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில் மீஞ்சூர் ஒன்றியத்தில் உள்ள தாட்கோ பயிற்சி மையக் கட்டடங்கள் தாட்கோவினால் கட்டி முடிக்கப்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுவிட்டது. இக்கட்டடங்களை ஊராட்சி பராமரித்துப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பது தொடர்பாக மேற்படி வாரியம்தான் முடிவு எடுத்திட வேண்டும்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் பல்வேறு தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு, பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டுவருகிறார்கள். உதாரணத்திற்கு, நேற்றைக்கு முன்தினம் பேசுகின்றபோதுகூட எங்களுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகின்றபோது 7 ஆயிரம் மகளிருக்கான நிலம் வழங்கும் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதேபோல், என் தலைமையிலான தமிழ்நாடு கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக மாவட்ட அளவிலான இளைஞர்களுக்கு தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி கடந்த ஆட்சியின்போது 50 ஆட்டோக்களை நான் வழங்கியிருக்கிறேன். அதேபோல், இந்த ஆட்சியிலும் 65 ஆட்டோக்களை வாங்கி 5 பெண்கள் உட்பட, அதை விநியோகிக்கின்றபோதுகூட தமிழக முதல்வர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு நலத் திட்டங்களை அறிவித்து அங்கே வந்தபோது அவர்கள் கையால்தான் அவை வழங்கப்பட்டன. ஆனால், அதே நேரத்தில் தாட்கோ மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வேலைவாய்ப்பு பயிற்சிக்கு ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் முறையாக, சரியாக குறைந்தபட்சம் 3, 4 ஆண்டுகள்கூட செயல்படுவதில்லை. கடந்த ஆட்சியின்போதுதான், கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் பொன்னேரி தொகுதியில் இப்படி மேலே குறிப்பிட்ட திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. பயிற்சிக்காகவும், வேலைவாய்ப்புக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டங்கள் சில வருடங்கள்கூட முறையாக நடைபெறாமல் இழுத்து மூடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அங்கேயிருப்பது நான் குறிப்பிட்டதுபோல...

2005 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கண்ணன், கேள்விக்கு வாருங்கள். கேள்வி என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: சுருக்கிச் சொல்லிவிடுகிறேன். தலைவர் அவர்களே, கடப்பாக்கம் ஊராட்சியில் நெய்தவாயல், தமிழ்க்குறிஞ்சூர், திருக்குறிஞ்சூர் இப்படி 9 கட்டடங்கள் இன்றைக்கும் பராமரிக்கப்படாமல் கிடக்கின்றன. அதனுடைய மதிப்பு ரூ. 40 இலட்சம் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை மாறுவதற்காக திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றபோது சரியாக, முறையாக இயங்குவதற்கு கண்காணிப்பதோடு, இந்தக் கட்டடங்களை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பயிற்சி மையங்களாகவும் அல்லது வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காகவும் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியத்தில் நேபாளி நூற்பாலை மையம், கிராம நெசவு மையம், பேக்கரி அலகு, காலணி தயாரிப்பு அலகு என்று 11 இடங்களில் ரூபாய் 17.42 இலட்சம் மதிப்பீட்டில் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்காக தாட்கோ நிறுவனம் மூலம் 1984 ஆம் ஆண்டில் கட்டடங்கள் கட்டி முடித்து அந்த ஆண்டிலேயே கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கட்டடத்தை ஊராட்சியே பராமரித்துப் பயன்படுத்திக்கொள்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி, கதர் கிராமத் தொழில் வாரியத்தை அணுகலாம். மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையில்தான் ஆதிதிராவிட மக்கள், இளைஞர்கள் விரும்புகிற, படித்த இளைஞர்கள் விரும்புகிற, பாமர மக்களுக்குத் தேவையான, அவர்கள் விரும்புகிற திட்டத்தை, சிறப்பான திட்டங்களை—இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழக்கூடிய அளவில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள்.

முற்பகல் 10-40

திரு. ஏ.எஸ். கண்ணன்: அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.